# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**மன்னா – 11     மார்ச் 2022     பிரதி – 12**



# ஆயர் மடல்



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிப்ரவரி மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மை பாதுகாத்தார். தேவைகளை நிறைவேற்றினார். அவருக்கு நன்றி சொல்லுவோம். மார்ச் மாதம் தவக்காலம் ஆரம்பம் ஆகிறது. தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக அமைத்துக்கொள்வோம். வாழ்வின் தீமையான செயல்களை களைந்துவிட்டு நன்மையானவைகளை செய்ய முயலுவோம். முடிந்தவரை உபவாசித்து ஜெபிக்க ஆயத்தப்படுவோம். ஆலய ஆராதனைகளில் உற்சாகமாய் பங்குக்கொள்வோம்.

பிப்ரவரி மாதத்தில் ஆலய ஆராதனைகளில் உற்சாகமாய் பங்குகொண்டு சிறப்பித்தீர்கள். உதாரத்துவமான காணிக்கைகளை கொடுத்தீர்கள். நன்றி! லெந்து காலத்தில் சுயஒறுப்பு காணிக்கை போடுவதற்கு உண்டியல் கொடுக்கப்படும். உற்சாகமான காணிக்கைகளை சேமிக்கவும்.

ஓய்வுநாள் பள்ளி ஆரம்பமாகிவிட்டது. பெற்றோர் உங்கள் பிள்ளைகளை மறைகல்விக்கு அனுப்பவும் வேண்டுகிறேன். பெண்கள் ஐக்கிய சங்கம், ஆண்கள் ஐக்கிய சங்கம் இவைகளிலும் உற்சாகமாய் பங்கு கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆராதனைக்கு புதியவர்களை அழைத்துவர முயற்சிப்போம். புதிதாக வந்தவர்களையும் அன்புடன் வரவேற்றுக் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆராதனைகள் தடையில்லாமல் நடைபெற ஜெபிப்போம். உலக சமாதானத்திற்காக ஜெபிப்போம். ரஷ்யா, உக்ரைன் இடையே அமைதி ஏற்பட ஜெபிப்போம்.

ஏப்ரல் மாத பாலைவன மன்னாவின் கருப்பொருள் **"உலக மீட்பரின் உயிர்ப்பு"** என்ற தலையங்கத்தில் எழுத்துக்களை படையுங்கள்.


ஆண்டவரின் அருள் நம் அனைவரோடும் இருப்பதாக.

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**

## ஆயர் அருளுரை

# தவக்காலம் மாற்றுருவாக்கத்தின் காலம்

### (மத்தேயு 4:1-11)




தவக்காலம் இலையுதிர் காலத்தின் இழப்பைப்போல இதயம் தவிக்கும் காலம். ஆன்மா அழுக்குகளை தூர் எடுக்கும் தூய பனிக்காலம். இக்காலம் இறைமனித உறவை புதுப்பிக்கும் காலம். சுருங்கி போன இதயத்தை விசாலமாக்கும் காலம். சுயநலத்தால், ஆணவத்தால், அதிகாரத்தால் தேங்கிய குட்டையான வாழ்வை ஓடும் நீரோடையாக மாற்றும் காலம். இந்த காலத்தில் நம்மையே சுய ஆய்வு செய்து, சோதனைகளை கடந்து ஆண்டவரின் அருளைப் பெறும் காலம். மனிதனின் மனநிலையை சுயஆய்வுக்கு உட்படுத்தும் காலம். இறைமனித உறவையும், மனித சமூக உறவையும் பலப்படுத்தும் காலமாகும். இயேசு நாதர் 40 நாட்கள் பாலைவனத்தில் நோன்பிருந்து இறை அனுபவம் பெறுகிறார். அந்த அனுபவத்தின் விளைவால்தான் அவரது இலட்சியமும், பணியும் அவருக்கு தெளிவாகிறது. பாலைவனத்தில் இயேசு நாதர் சந்தித்த மூன்று சோதனைகளை குறித்து சிந்திப்போம்.

### 1. கல்லை அப்பமாக்கு:- (மத்தேயு 4:3)

கற்களை அப்பமாக மாற்ற சொல்லி சாத்தான் சோதித்தபோது உணவுக்காக அவர் கொள்கையை விட்டுக்கொடுக்கவில்லை. உணவை விட தந்தையின் விருப்பத்தை நிறைவு செய்வதே மேலானது என்பதே அவரது மதிப்பீடு. உணவை ஒரு பொருட்டாக அவர் கருதவில்லை. சோதனை நேரத்தில் என்ன பேச வேண்டும், எப்படி பேச வேண்டும், எப்போது பேசாமல் மௌனமாக இருப்பது என்பதில் மட்டும் தெளிவாக இருந்தார். எந்த நேரத்தில் செயல்படவேண்டும், எந்தெந்த சூழலில் தேவையானதை மட்டும் பேசவேண்டும் என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார்.

இயேசு சோதிக்கப்பட்டாரே தவிர வீழ்ச்சியடையவில்லை. சோதனைகள் எல்லா மனிதனுக்கும் உண்டு. சோதனைக்குள்ளாகின்ற எல்லா மனிதர்களும் வீழ்ந்துவிடுவதில்லை. இயேசு நாதர் பாலைவன சோதனையை வென்ற பிறகு தூய ஆவியின் துணையோடு ஆற்றலோடு

இறைப்பணி செய்தார். சோதனைகளை வெல்ல இவருக்கு துணையாக இருந்தது இவர் பெற்ற ஞானஸ்நானமும் தூய ஆவியானவரின் கொடையுமே ஆகும்.

## 2. கட்டிடத்திலிருந்து குதியும்:- (மத்தேயு 4:6)

எருசலேம் ஆலயத்தின் முகப்பிலிருந்து குதித்து தன்னை இறைமகன் (மேசியா) என்று மெய்ப்பிக்கும்படியாக சாத்தான் சோதிக்கிறான். பாடுகள் துன்பங்கள், வேதனைகள் ஏற்க்காமல் குறுக்குவழியில் மேசியா என்ற நிலையை அடைவதற்கான சோதனை இது. இயேசு நாதரின் பணி வாழ்விலும் இந்த சோதனை வருகிறது. பேதுரு இயேசு நாதரிடம் சிலுவை பாடுகள் வேண்டாம் என சொன்னபோது எனக்கு பின்னாகப் போ சாத்தானே என்றார்.

## 3. காலில் விழுந்து வணங்கும்:- (மத்தேயு 4:9)

உலக அரசுகள் அனைத்தையும் காட்டி தன்னை வணங்கினால் அவற்றை தருவதாக சாத்தான் சோதிக்கிறான். இறைவனா? உலக இன்பமா? என்ற சோதனையை இயேசுவின் முன் வைக்கிறான். இறைவரையும் அவரது விருப்பத்தையும் உதறி தள்ளிவிட சாத்தான் அழைப்பு விடுக்கிறான். இந்த சோதனைகளை அவர் வென்றார்.

இயேசு நாதரின் மூன்று சோதனைகளும் நமக்கு ஒரு சிறந்த பாடமாக அமைகிறது. பாவத்தை தவிர்க்கவும், மாயக் கவர்ச்சிகளில் மயங்காமல் இருக்கவும் இயேசு நமக்கு வழிகாட்டுகிறார். பாலைவன வாழ்வில் ஜெபம், தவம் இவைகளின் வழியாகத்தான் இயேசு மனவலிமையைப் பெற்றார். அப்படிப்பட்ட மனவலிமை நமக்கு இருந்தால் நிதானமாக செயல்பட்டு சோதனைகளை வெல்லமுடியும்.

தவக்காலத்தில் மனதளவில் மாற்றம் காணாது ஆண்டுக்கொரு முறை வாடிக்கையான சடங்காகி மட்டும் அமைந்தால் அது ஒரே பணியை மீண்டும் மீண்டும் செய்யும் செக்கு மாட்டு சிந்தனையாகவே அமையும். தவக்காலம் அர்த்தமுள்ளதாகவும், நோன்புகள் உள்ளத்தின் நிறைவிலிருந்து வருவதாகவும், முற்போக்கு சிந்தனைகளை முன்னேற்ற பாதையில் அமைத்து செல்வதாகவும் நம்மை பண்படுத்துவோம். தவக்காலம் நமது வாழ்வை மாற்றுருவாக்கம் செய்யட்டும். ஆண்டவர் அதற்கான ஆற்றலை அருளுவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**

# இயேசு எவ்வளவு வல்லவர்



இயேசு கிறிஸ்துவை உறுதியாய் நம்பின பாபு என்றொரு சிறுவன் இருந்தான். அவன் சின்ன வயதிலே தன் நண்பர்களிடம் தன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவு வல்லவர் என்றும், தன் வாழ்வில் என்ன செய்து வருகிறார் என்றும் சொல்லுவான். பாபுவின் நண்பர்கள் அவனை கிண்டல் செய்வர். ஆனால் அவன் சாட்சி சொல்வதை நிறுத்தவில்லை.



ஒருநாள் பாபுவின் நண்பர்கள் எரிச்சலடைந்து அவனுக்கு தீமை செய்ய திட்டமிட்டனர். பாபு பாடசாலையில் இருந்து வீட்டிற்கு வரும் வழியில் அவனுக்காக காத்திருந்தனர். அவன் அவர்களருகே வந்தபோது அவனை அடித்து உதைத்தனர். பின் அவனிடம் உன் இயேசு எவ்வளவு வல்லவர், இப்போது உன் இயேசு என்ன செய்யமுடியும் என்று கேலி செய்து சிரித்தனர்.

பாபு அமைதியாக அவர்களை பார்த்து புன்முறுவலோடு இயேசு நாதரும் தன்னை அடித்து துன்பப்படுத்தியவர்களையும், சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்தார். அதுபோல் நானும் உங்களை மன்னிக்க அவர் எனக்கு சக்தி அளிக்கிறார் என்றான். அவனது எதிரிகளான நண்பர்கள் இந்த பதிலை பாபுவிடமிருந்து சற்றும் எதிர்பார்க்கவில்லை. செய்வதறியாது மலைத்து நின்றனர். அனைவரும் அவனிடம் மன்னிப்பு கோரினர். சீக்கிரத்தில் ஒவ்வொருவராக இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவராயினர். மேலும் ஆண்டவர் இயேசுவை குறித்து மற்றவர்களுக்கு அறிவிக்கவும் செய்தார்கள். நண்பர்களின் வாழ்வில் புதுமாற்றம் பெற்றனர். லெந்து காலம் மனமாற்றத்தின் காலம் ஆகும். கிறிஸ்துவின் மன்னிப்பின் சிந்தையை வாழ்வில் ஏற்றுக்கொள்வோம்.

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## "மாற்றத்தை உருவாக்கும் சமாரியா பெண்"

(யோவான் 4:27-42)

சமூகத்தில் மாற்றங்களை உருவாக்கி மக்கள் வாழ்வில் விடியல்களை தந்தவர்களில் பெண்களின் பங்களிப்பு அதிகமாயிருக்கிறது. யோவான் நான்காம் அதிகாரத்தில் ஒரு பெயர் அறியப்படாத சமாரியா பெண்மணி அவருடைய செயல்கள் நல்ல மாற்றங்களை தந்திருக்கிறது. அதனை குறித்து சிந்திப்போம்.

### 1. மரபுகளை உடைத்த பெண்:-



இயேசு சமாரிய பெண்மணியோடு உரையாடினார். அவள் அவரிடம் நீர் யூதர்? நானோ சமாரியர். நீர் என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்பது எப்படி? என்று கேட்டாள். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை. இப்படி பாரம்பரியமாக பிளவுப்பட்டிருந்த சமுதாயத்தை சார்ந்த சமாரியபெண் தன் மரபுகளையும், தடைகளையும் தாண்டி நின்று இயேசு நாதரோடு உரையாடுகிறார். பாரம்பரியங்களை உடைத்து தள்ளிய அந்த உரையாடலினால் அந்த கிராமமே மேசியா என தெரிந்துகொள்ள செய்கிறது. சமாரியா பெண்ணின் மரபை உடைத்த செயல் அந்த கிராமத்திற்கே வாழ்வை கொடுத்தது.

### 2. மனிதர்களை அழைத்து வந்த பெண்:-

யோவான் 4:29-ல் நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்னவரை வந்து பாருங்கள். அவர் மேசியாவாக இருப்பாரோ என ஊருக்குள் சென்று சொன்னாள். இதைக் கேட்டு வந்த மக்கள் இயேசுநாதரிடம் நம்பிக்கை கொண்டனர். சமாரியா பெண்ணின் சான்று நல்ல மாற்றங்களை கொண்டு வந்ததோடல்லாமல் நற்செய்தியாகிய இயேசுநாதரை உலகிற்கு உயர்த்தி காட்ட செய்கிறது.

இயேசு நாதர் எல்லா நிலைகளிலும் விடுதலைதரும் மாற்றங்களை உருவாக்கினார். சமாரிய பெண்மணி ஆண்டவரிடம் பலரை கூட்டு சேர்க்கும் வழிகாட்டியாய் நின்றாள். மாற்றத்தை உருவாக்கினாள். அதுபோன்று பெண்களாகிய நாமும் மாற்றத்தை உருவாக்குவோம். ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி. M. R. பெக்ஸிலின் போவாஸ்**

## தடைகள் தகரட்டும்




மண்ணில் :
விண்ணில் : 1806
ஊர் : தஞ்சாவூர்
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

இந்தியாவைச் "சமயங்களின் சங்கமம்" என்று அழைக்கலாம். ஏனெனில் பல சமயங்கள் இந்தியாவிலிருந்தே தோற்றுவிக்கப்பட்டன. அதே வேளையில் இந்தியாவை "மூடத்தனங்கள் நிறைந்த நாடு" என்றுக் கூடக் கூறமுடியும். ஏனெனில் ஒரு காலத்தில் உலகத்தில் எவ்வித பாகங்களிலும் நடைபெறாத கொடிய சம்பவங்கள் இங்கே நடந்ததுண்டு.

சதி, உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம், பெண்கல்வி மறுத்தல் இன்னும் பல இதற்கு உதாரணங்களாகும். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு அழகிய இளம்பெண். கணவன் இறந்துவிட்டான். பிணத்தோடு சேர்த்து அவளையும் சுட்டெரிக்க இழுத்துச் செல்லப்பட்டாள். இதனை அறிந்த கர்னல் லிட்டில்டன் விரைந்து சென்று அவளை காப்பாற்றினார். ஆனால் ஊரார் அவளை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் லிட்டில்டன் அவளைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அப்பெண்ணே கோகிலா என்ற குளோரிந்தா ஆவார்.

கிறிஸ்தவ சித்தாந்தங்களை லிட்டில்டன் பிரபு மூலம் அறிந்துகொண்ட குளோரிந்தாள் ஞானஸ்நானம் பெற விரும்பி சுவார்ட்ஸ் ஐயரிடம் புதுபிறப்பு அடைந்தாள். அன்றுமுதல் காண்பவரிடமெல்லாம் கிறிஸ்துவைப் பற்றிக் கூறி ஆத்தும ஆதாயப் பணியைச் செய்தார். 1780-ம் ஆண்டு, 40 பேர் இவரால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட விரும்பிய குளோரிந்தாள் அம்மையார் 1785-ம் ஆண்டு நெல்லையில் முதல் ஆலயத்தைக் கட்டினார். சிறு பள்ளிக் கூடத்தையும் ஆரம்பித்தார்.

ஆச்சாரம் மிக்க பிராமணக் குடியில் பிறந்து, சாதி ஆச்சாரங்களைத் தகர்த்து, ஏழை எளியவர்களுடன் சமமாக பழகி, அவர்களுக்கு பணஉதவி அளித்து அவர்கள் ஆன்ம முன்னேற்றத்திற்காக உழைத்து,

தனக்கென ஒரு முத்திரையைத் திருச்சபை வரலாற்றில் பதித்த குளோரிந்தாள் நமக்கு ஓர் தூண்டுகோல்.

அன்பரே! சாதி மதங்களைக் கடந்து, கிறிஸ்துவை பிறர்க்கு அறிவிப்பவரா நீங்கள்?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** உன் ஓய்வினை சீக்கிரம் எடுத்துக்கொள்ளாதே. எடுத்துக்கொண்டால் உனது உண்மை ஓய்வினை நீ அடைய முடியாது. – ஜான் பிரவுன்

**குயவனின் கரங்களில்:** ஆண்டவரே! தடைகள் அனைத்தையும் தாண்டி, தலை நிமிர்ந்தபடி உமக்கு ஊழியம் செய்வேன்.

**தியானத்திற்கு** : லேவி. 8, சங்கீதம் 108, 1கொரி. 16

## *New Arrivals*

### "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"



**Miss. J. P. Fairlyn Ivana**

**D/o Mr. Jean C. R. Shibin & Mrs. D. Percy Jean**

**15-02-2022**

## எண்கள் ~ தொடர்

### எண் ஆறு:-

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனது அருட்பணியில் முதலாவது அற்புதத்தை கானாவூர் திருமண இல்லத்தில் நிறைவேற்றினார். திருமண வீட்டில் விருந்தினராய் வந்தவர் விருந்தில் ஏற்பட்ட குறைவை நிறைவாக்கினார்.

### கற்ஜாடிகள் ஆறு:- (யோவான் 2:6)

யூதர்கள் தங்கள் இல்லத்தில் வருகின்றவர்களின் கால்களை சுத்தம் பண்ணுவதற்கு கற்ஜாடிகளில் தண்ணீர் நிரப்பி வைப்பது வழக்கம். இங்கேயும் 6 கற்ஜாடிகள் வைத்து இருந்தார்கள். இயேசு நாதர் இந்த கற்ஜாடிகளில் தண்ணீர் நிரப்ப சொல்லி அந்த தண்ணீரை ருசியுள்ள ரசமாக மாற்றினார். அவர் குறைவை நிறைவாக்கும் ஆண்டவர். ஆறாவது எண் இயேசு நாதரின் முதலாவது அற்புதத்தை சுட்டிக்காட்டுகின்றது.

## எண் ஏழு:-

ஏழு என்பது முழுமையை குறிக்கும். பழைய ஏற்பாட்டில் ஏழு என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

## ஏழாவது எண்ணில் வரும் நிகழ்வுகள்:-

### A. சிலுவையின் வசனங்கள் ஏழு:-

இயேசு நாதர் சிலுவையில் தொங்கும்போது சொன்ன வார்த்தைகள். இது நான்கு நற்செய்தி நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

1. **மன்னிப்பு:-** லூக்கா 23:34 தன்னைத் துன்பப்படுத்தியவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார்.
2. **இரட்சிப்பு:-** லூக்கா 23:43 தன் குற்றத்தை அறிக்கையிட்டவனுக்கு இரட்சிப்பை வழங்கினார்.
3. **பராமரிப்பு:-** யோவான் 19:26 தன் தாயை பாதுகாக்கும் மாதிரியை காண்பித்தார்.
4. **அங்கலாய்ப்பு:-** மத்தேயு 27:46 காரிருள் வேளையில் தான் கைவிடப்பட்டது போன்ற அனுபவம்.
5. **தாகம்:-** யோவான் 19:28 உடல்தாகம் ஆத்துமதாகம்.
6. **முடிந்தது:-** யோவான் 19:30 வேதவாக்கியம் எல்லாம் நிறைவேற்றி முடித்தார்.
7. **ஒப்படைப்பு:-** லூக்கா 23:46 தன் ஆவியை பிதாவிடம் ஒப்படைத்தார்.

### B. நாகமான் யோர்தானில் மூழ்கினது 7 முறை:-

2இராஜாக்கள் 5:14 சீறுகின்ற நாகம் போன்ற சீரியா நாட்டு படைத்தலைவன் நாகமான் தொழுநோய் நீங்க எலிசா இறைவாக்கினரின் வார்த்தையின்படி யோர்தானில் 7 முறை மூழ்கி சுகம் பெற்றார்.

### C. ஆசியாவிலுள்ள சபைகள் ஏழு:-

1. எபேசு – வெளி 2:8
2. சிமிர்னா – வெளி 2:8
3. பெர்கமு – வெளி 2:12
4. தியத்தீரா – வெளி 2:18
5. சர்தை – வெளி. 3:1
6. பிலதெல்பியா – வெளி. 3:7
7. லவோதிக்கேயா

**D.** குத்துவிளக்குகள் ஏழு:- வெளி 1:13

குத்துவிளக்கு ஒளியைக் குறிக்கின்றன. நம் உள்ளத்து இருள் நீக்கும் திருவிளக்கு கிறிஸ்துவே.

**E.** ஆண்டவர் கையில் ஏந்திக்கொண்டிருந்த நட்சத்திரங்கள் ஏழு:- வெளி 1:16

நட்சத்திரங்கள் ஒளியை கொடுக்கின்றன. வழிகாட்டுகின்றன.

**F.** எக்காளங்கள் ஏழு:- வெளி 8:2

ஆண்டவருக்கு முன்பாக 7 தூதர்கள், 7 எக்காளங்களை கையில் வைத்து ஊதுவதற்கு ஆயத்தமாயிருந்தார்கள்.

**G.** வாதைகளுடைய ஏழு தூதர்கள்:- வெளி 15:1

இவர்களால் கடவுளின் கோபம் முடிகிறது.

**H.** கோபகலசங்கள் ஏழு:- வெளி 16:1

தேவனுடைய கோபகலசங்களை பூமியின்மேல் ஊற்றுவதற்கு நியமிக்கப்பட்ட தூதர்கள்.

**I.** ஏழு அப்பங்கள்:- மத்தேயு 15:36

ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களினால் சாப்பிட்ட புருஷர்கள் மட்டும் 4000 பேர்.

**J.** வாரத்தின் நாட்கள் ஏழு

**K.** வானவில்லின் நிறங்கள் ஏழு

**L.** உலகத்தின் அதிசயங்கள் ஏழு

**M.** உலக கண்டங்கள் ஏழு

இவ்வாறு ஏழு என்ற எண்ணிற்கு முக்கியத்துவம் உண்டு. ஏழு முழுமையைக் குறிக்கும் எண்ணாக உள்ளது.

(தொடர்ந்து அடுத்த மாத இதழில் பார்க்கலாம்)

# பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – பிப்ரவரி 2022

நமது ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையின் அனைவருக்கும், பாலைவன மன்னா வாசகர்களுக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப்பின் பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை பெப்ரவரி மாதம் 17-ம் தேதி வியாழன் இரவு 9 மணி முதல் 10:15 மணி வரை நடைபெற்றது. அதற்காக நமது தேவாதி தேவனுக்கு முதலாவதாக ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

பெண்கள் ஐக்கிய சங்க செயலர் திருமதி. சாரா ராஜாசிங், பெண்கள் ஐக்கிய சங்க தலைவரான நமது போதகர் Rev. போவாஸ் அவர்களையும், பெண்கள் ஐக்கிய சங்க தலைவியான நமது போதகர் அம்மா திருமதி. பெக்ஸிலின் போவாஸ் அவர்களையும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக வரவேற்றார்கள். பின் போதகர் அவர்கள் ஆரம்ப ஜெபம் ஏறெடுத்து, ஆலோசனை வழங்கி கூடுகையை ஆரம்பித்து வைத்தார்கள். போதகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம். பின்னர் துதிஸ்தோத்திர பாடல்கள் பாடப்பட்டது.

கர்த்தருடைய வார்த்தையை போதகர் அம்மா திருமதி. பெக்ஸிலின் போவாஸ் அவர்கள் பகிர்ந்தளித்தார்கள். வேதபாடமாக 2சாமுவேல் 20:1-22 வாசிக்கப்பட்டு "புத்தியுள்ள ஸ்திரீ" என்ற தலைப்பில் இறைவார்த்தையை அளித்தார்கள். வேதபாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புத்தியுள்ள ஸ்திரீயினைப்பற்றி, அவள் புத்திசாலியாக செயல்பட்டு தன் ஜனத்தை பாதுகாத்தாள் என்றும், அவள் புத்தியுள்ள ஆலோசனை வழங்கினதுபோல நாமும் நம் வாழ்வின் முடிவுகளை எடுக்கும் முன் தேவனிடத்தில் ஆலோசனைகளை பெற்று புத்தியாய் செயல்படவேண்டும் என்றும் விவரித்து கூறினார்கள். செய்தி வந்திருந்த யாவருக்கும் பிரயோஜனமாக இருந்தது. செய்தியை பகிர்ந்தளித்த போதகர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பின்னர் ஜெபவேளையை திருமதி. சாரா ராஜாசிங் வழிநடத்தினார்கள். கொடுக்கப்பட்ட ஜெபக்குறிப்புகளுக்காக சங்கத்தினர் பாரத்தோடு திருச்சபைக்காக, மிஷனெரிகளுக்காக, குடும்பங்களுக்காக, ஓமான் மற்றும் இந்திய தேசங்களுக்காக ஜெபித்தார்கள். பின்னர் சில சகோதரிகள் கர்த்தருடைய நாம மகிமைக்காக, தேவன் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்தார்கள். அவர்களின் சாட்சி அனைவரின் விசுவாசத்தை பெலப்படுத்துவதாக அமைந்தது.

இந்த மாத பெண்கள் ஐக்கிய சங்க கூடுகையை தாங்கினவர்கள் திருமதி. சாரா ராஜாசிங், திருமதி. ஷீபா சுஜித். கர்த்தர்தாமே அவர்கள் குடும்பத்தினை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

நிறைவாக சாட்சி சொன்னவர்களுக்காகவும், Sponsors-களுக்காகவும் மற்றும் வந்திருந்த அனைவருக்காகவும் பெண்கள் ஐக்கிய சங்க சபை குழு பிரதிநிதி திருமதி. மஹிழா ஜெங்கின் அவர்கள் ஜெபித்து, கூடுகை இனிதே நிறைவு பெற்றது. வருகிற மாதங்களில் நமது திருச்சபையின் அனைத்து பெண்களும், பெண்கள் ஐக்கிய சங்க கூடுகையில் பங்குபெற்று இறைஆசி பெறுமாறு அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

**இவண்**

**பெண்கள் ஐக்கிய செயலர்**
**திருமதி. சாரா ராஜாசிங்**

**பின்குறிப்பு:-** இந்த வருட பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டு தேர்வு வருகிற அக்டோபர் மாதம் நடைபெறும்.

**தேர்வு பகுதி:-** லூக்கா எழுதின சுவிசேஷம் முழுவதும்.

## ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – பிப்ரவரி 2022

பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் ஆண்கள் சங்கத்தின் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிப்ரவரி மாத ஆண்கள் சங்க கூட்டம் 17-02-2022 அன்று மார்த்தோமா ஹாலில் வைத்து ஆண்டவருடைய கிருபையால் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 9:00 மணியளவில் திரு. ராபின்தேவதாஸ் பாடல் பாட போதகர் ஜெபத்துடன் கூட்டம் இனிதே ஆரம்பமானது.

ஆவிக்குரிய பாடல்கள் பாடி யோவான் 1-ம் அதிகாரம் 35-43 வரையுள்ள வசனங்களை ஆளுக்கொரு வசனம் வாசிக்கப்பட்டது. அதன்பின் ஆண்டவருடைய செய்தியை போதகர் வழங்கினார். அந்திரேயாவின் பண்புகளைக் குறித்து பேசினார். அறிமுகம் செய்பவர், அழைத்து வருபவர், அருட்பணி செய்தவர் என்ற தலையங்கங்களில் செய்தியை வழங்கினார்கள். அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. தொடர்ந்து சாட்சிகள், அதனைத் தொடர்ந்து ஜெப விண்ணப்பங்களுக்கு ஜெபம் ஏறெடுக்கப்பட்டு ஜெபித்து ஆசீர்வாதம் கூறி குறித்த நேரத்தில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

அருமையான செய்தியை வழங்கிய போதகர், மற்றும் பங்குகொண்ட அனைவருக்கும் ஆண்கள் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாளுக்குரிய பங்கைத் தந்தவர்கள் (Sponsor)

திரு. அலெக்ஸ் பாஸ்கர்

திரு. ஆஸ்டின் டானியல் ராஜ்

அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிவரும் நாட்களிலும் ஆண்கள் சங்கத்தினர் எல்லாக் கூடுகைகளிலும் கலந்துகொண்டு ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

**இவண்,**
**ஆண்கள் சங்க செயலர்,**
**திரு. M. சைலஸ்**

## சிலுவை சுயக்கட்டுபாட்டுக்கும் துன்புறுத்தலுக்கும் அடையாளம்




லெந்து காலம் கிறிஸ்தவ வாழ்வின் வசந்த காலம். பாவமாம் இலைகள் பழுத்து உதிர்ந்து புது துளிர்விடும் காலம். லெந்து காலத்தின் முதல் நாள் சாம்பல் புதன் கிழமை என்று அழைக்கப்படுகிறது. எளிமை, தாழ்மை போன்றவற்றிற்கு அடையாளமாக குறிக்கப்படும் சாம்பலை மையப்படுத்தி லெந்து நாட்களில் அடியெடுத்து வைப்பது கிறிஸ்தவ வாழ்வில் பொருத்தமுடையதாகும். தூய பவுலார் இயேசு கிறிஸ்துவின் அச்சு அடையாளங்களை என்னுடைய உடம்பில் தரித்திருக்கிறேன் என்று கூறும் கூற்று கிறிஸ்தவ மக்களுக்கு விடப்பட்டிருக்கும் ஓர் அறைகூவல் எனக் கூறினால் மிகையாகாது.

முன்னாட்களில் காளை மாடுகளுக்குப் பின்னால் அக்காளைகள் யாருடையவை என்பதைக் குறிக்க அடையாளமிட்டனர். இதற்காக பழுக்கக் காய்ச்சிய இரும்பு கம்பியைப் பயன்படுத்தினர். வலியைத் தாங்கி அந்த அடையாளத்தை ஏற்று அந்த நபரின் கட்டுப்பாட்டில் காளைகள் இருப்பதைக் கவனித்திருக்கலாம். அதோடு அவற்றின் மேல் போடப்பட்டுள்ள அடையாளம் அது யாருடையவை என்பதைத் தெளிவாக உணர்த்தும். இங்கே பவுலார் கிறிஸ்துவின் அடையாளம் என்னில்

இருக்கிறது என்று கூறுவதில் இருந்து கிறிஸ்துவின் தன்மைகள், செயல்கள் அனைத்தும் அவர் வாழ்வில் இருந்து வெளிப்படுகின்றன எனக் குறிப்பிடுகிறார்.

### 1. துன்பத்தை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டார். (கலா 6:12)

வாழ்வில் இரண்டு நிலைகளில் துன்பம் வருகிறது என்று தூய பேதுரு குறிப்பிடுகிறார். ஒன்று நன்மை செய்வதால் வரும் துன்பம். இரண்டு தீமை செய்வதால் வரும் துன்பம். இவற்றில் நன்மை செய்வதால் வரும் துன்பம் மேன்னைமயானது என்றும் அதனை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்வோர் அதற்குரிய பலனைப் பெறுவர் என்றும் குறிப்பிடுகிறார் (1பேதுரு 2:20). இயேசு நாதர் தமது மலைப்பொழிவில் நீதியினிமித்தம் துன்புறுவோர் பேறுபெற்றோர். அவர்கள் இறையாட்சியைப் பெற்றுக் கொள்வர் என்கிறார் (மத் 5:10).

தூய பவுலாரின் வாழ்வில் இதனைத் தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. தவறான வழிகளில் தப்பித்து செல்வதையோ, துன்பமற்ற பெருவாழ்வு வாழ்வதையே அவர் விரும்பாமல் துன்ப சூழலிலும் இறைப்பற்றுமையில் உறுதியோடு இருந்து சாட்சி பகர்வதையே விரும்பினார். எனவே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் கதவுகள் திறக்கப்பட்டுச் சங்கிலிகள் அனைத்தும் கழன்றாலும் அங்கேயே இருந்து சிறைச்சாலைக்காரரின் சிந்தனையைத் தூண்டினார். திறந்து விடப்பட்டாலும் தப்பித்துச் செல்லாத இவரது சாட்சி வாழ்வு சிறைச்சாலைக்காரரையும் அவரது குடும்பத்தையும் திருமுழுக்குப் பெற தூண்டியது. வாழ்வில் நற்செய்தியின் நிமித்தம் அவர் அனுபவித்த அனைத்துப் பாடுகளையும் இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டு அனைவருக்கும் சாட்சி ஆயினார். எடுத்துக்காட்டாக உடையும் கப்பலில் உடைக்கப்படா நிலையோடும், பாம்பு தீண்டியபோதும் துவண்டு போகாத வாழ்வோடும் (அப் 28:1-6), அவர் வெளிப்படுத்திய சாட்சி வாழ்வு வியப்பில் ஆழ்த்தியது. இயேசு கிறிஸ்து தமது வாழ்வின் துன்ப சூழலை இன்முகத்தோடு ஏற்க ஆயத்தமாகியதோடு சீடர்களையும் திடப்படுத்தினார் (மாற் 10: 32-34). பவுலார் இயேசு கிறிஸ்துவின் வாழ்விலிருந்து கற்று தம்முடைய வாழ்வில் பிரிக்க முடியாத அடையாளமாக இதனைத் தரித்து நம்மையும் அவ்வித வாழ்விற்கு அர்ப்பணிக்கத் தூண்டுகிறார்.

### 2. வேடம் களைந்து தூய வாழ்வு வாழ்ந்தவர்: (கலா. 6:12)

துன்பம் ஏற்று வாழ விரும்பாதவர்கள் சடங்குகளைக் கட்டாயப்படுத்தி வேடம் தரித்து மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று பவுலார் கூறுகிறார். சடங்குகளுக்கு அப்பால் உள்ள உண்மையான வாழ்வு நிலையைப் பவுலார் அறிவுறுத்துகிறார். விருத்தசேதனம் என்ற யூதச் சடங்கைக்

குறித்துப் புவுலார் கூறும்போது விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனம் இல்லாமையும் ஒன்றுமில்லை. அதோடு இந்த லெந்து காலத்தில் அடியெடுத்து வைத்துள்ள நாம், வேடம் புனைந்த வாழ்வை இறைவன் அங்கீகரிப்பதில்லை என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். வெளிவேடமாய் மனிதர்கள் காணும் பொருட்டு தங்களைத் தாழ்த்துவது போல் நடித்து பிறரை ஏமாற்றும் போலியான உபவாசத்தைக் கடவுள் வெறுக்கிறார். ஆனால் ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலையையும். தேவையோடு இருப்பவர்களின் தேவையை நிறைவு செய்வதும் நம்மைச் சார்ந்தவர்களுக்கு நம்மை ஒளிக்காமல் உதவி செய்வதும் இறைவன் விரும்பும் உபவாசம் என்கிறார் (ஏசாயா 58:6,7). இயேசுகிறிஸ்துவும் போலியான வேடம் நிறைந்த வாழ்வை வன்மையாக எதிர்த்தார். எனவே வேடம் களைந்து உண்மையான, அப்பட்டமான, தூய்மையான வாழ்வு வாழ இறைவனால் எதிர்பார்க்கப்படுகிறோம்.

**- V.G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 105

### மார்ச் 2022 மாத கேள்விகள்

**(2கொரிந்தியர் 4 முதல் 13 முடிய)**

1. என் குறைவை நிறைவாக்கினார்கள் என பவுல் யாரை கூறுகிறார்?
2. எது பலவீனமாயிருக்கிறது என்கிறார்கள்?
3. கிறிஸ்து எதினால் பிழைத்திருக்கிறார்?
4. யார் உத்தமன்?
5. பவுலின் மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள் தன்னைவிட்டு நீங்கும்படி கர்த்தரிடத்தில் எத்தனை முறை வேண்டிக்கொண்டார்?
6. எதற்காக விண்ணப்பம் பண்ணுகிறோம் என கொரிந்து மக்களிடம் பவுல் கூறுகிறார்?
7. யாருடைய வேஷத்தை சாத்தான் தரித்துக்கொள்கிறான்?
8. எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால் யாருக்கு அது மறைபொருளாயிருக்கும்?
9. யார் ஒரு வருடமாக தர்மசகாயத்திற்காக ஆயத்தமாயிருக்கிறார்கள்?
10. தேவனுக்கேற்ற துக்கம் எதை உண்டாக்குகிறது?
11. ஆவியென்னும் அச்சாரத்தை நமக்கு தந்தவர் யார்?

12. பிள்ளைகளுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கவேண்டியது யார்?
13. மரணத்தை உண்டாக்குவது எது?
14. நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை என்ற வசனத்தை ஆதாரத்துடன் எழுதுக?
15. பவுல் தான் யாருடைய கைக்கு தப்பினதாக கூறினார்?
16. தேவன் எதை தங்களிடத்தில் ஒப்புவித்ததாக பவுல் கூறுகிறார்?
17. காணப்படாதவைகள் எப்படிப்பட்டவை?
18. எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது என யாரிடம் கூறப்பட்டது?
19. புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரனை யாருடன் அனுப்பியதாக கூறினார்?
20. எதை வர்த்திக்க செய்வார்?

## பிப்ரவரி மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. சுயபிரயோஜனம் - 1கொரி. 10:32
2. ஆதாம் - 1கொரி. 15:45
3. ஆவி என்னும் அச்சாரம் - 2கொரி. 1:22
4. அன்பு – 1கொரி. 13:4,6
5. எழுத்து – 2கொரி. 3:6
6. கேபா – 1கொரி. 15:5
7. ஒருவருக்காக ஒருவர் - 1கொரி. 11:33
8. சமாதானம் - 1கொரி. 14:33
9. தேவசந்நிதியில் - 2கொரி. 2:17
10. இலட்சணமுள்ளவைகளுக்கு – 1கொரி. 12:24
11. பவுல் - 2கொரி. 1:9,10
12. அன்பு – 1கொரி. 13:13
13. மரணம் - 1கொரி. 15:26
14. இருபத்து மூவாயிரம் - 1கொரி. 10:8
15. சாத்தான் - 1கொரி. 10:8
16. நியாயப்பிரமாணம் - 1கொரி. 15:56
17. புருஷன் - 1கொரி. 11:14
18. மோசேயின் ஆகமங்கள் - 2கொரி. 3:15
19. 5 – 1கொரி. 14:19
20. சரீரம் - 1கொரி. 12:14

## பிப்ரவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Leela Gladson |
| Mrs. Aspin Bejo | Mrs. Manju Martin |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Felsi Rani John | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Josephin Anto Kingston | |

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 90

### மார்ச் 2022 மாத கேள்விகள்

### (எரேமியா அதிகாரம் 43 முதல் 52 முடிய)

1. நீ பொய் சொல்லுகிறாய் என்று எரேமியாவிடம் கூறினவர்கள் யார்?
2. எகிப்து தேசத்தில் இருந்த யூதர் யாருக்கு நேர்ந்துகொண்ட பொருத்தனைகளைத் தங்கள் கையினால் நிறைவேற்றினார்கள்?
3. நேபுகாத்நேச்சார் 18-ம் வருஷத்தில் எருசலேமிலிருந்து சிறைப்பிடித்து கொண்டுபோனவர்களின் எண்ணிக்கை?
4. கல்தேயர் தேசத்திலிருந்து கேட்கப்படுவது என்ன?
5. பாருக்கின் நோவை கர்த்தர் எதினால் வர்த்திக்கப்பண்ணியதாக கூறினான்?
6. எகிப்தியன் எதைப்போல் புரண்டு வருகிறான்?
7. வில்லும் வேலும் பிடித்து வருபவர்கள் யார்?
8. ஓடி தூரத்தில் அலையுங்கள் என்று யாரிடம் கூறப்பட்டது?
9. யாருடைய ஜலங்கள் வற்றிப்போகும்?
10. மோவாப் பிடிக்கப்படும்போது சிறையாக்கப்படுவது எது?
11. எதன் சத்தத்தைக் கேட்டு தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளை நோக்கி பாராதிருப்பார்கள்?
12. கல்தேயர் எதை உடைத்துப்போட்டார்கள்?
13. கரேயாவின் குமாரன் யார்?
14. கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் எது?

15. எருசலேமை தண்டித்தப்படி எந்த தேசத்தை தண்டிப்பேன் என கர்த்தர் கூறுகிறார்?
16. எது பாழாகும் மகா நேர்த்தியான கடாரி?
17. மாம்சமான யாவர்மேலும் எதை வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
18. நொறுங்குண்டது எது?
19. எதின் மதில்களில் தீக்கொளுத்துவேன் என்கிறார்?
20. எகிப்தியன் எதை போல் புரண்டு வருகிறான்?

## பிப்ரவரி மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. தாவீதின் சந்ததியையும், லேவியரையும் - எரேமியா 33:22
2. யூதாவில் மீந்திருக்கிறவர்கள் - எரேமியா 42:15,18
3. அடிமை வீடு – எரேமியா 34:14
4. சிதேக்கியா அரசாண்ட பதினோராம் வருஷம் நாலாம் மாதம் ஒன்பதாம் தேதி – எரேமியா 39:2
5. இஸ்மவேல் - எரேமியா 41:1
6. யோனத்தானுடைய வீடு – எரேமியா 37:15
7. கல்தேயர், சீரியர் - எரேமியா 35:11
8. எரேமியா பாருக்கிடம் - எரேமியா 36:5
9. நேபுசராதான் - எரேமியா 40:1
10. எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியன் - எரேமியா 38:12,13
11. எகிப்து – எரேமியா 42:14
12. யூதா – எரேமியா 33:16
13. எரேமியா – எரேமியா 37:12
14. கோதுமை, வாற்கோதுமை, எண்ணெய், தேனுமுள்ள புதையல்கள் - எரேமியா 41:8
15. லாகீஸ், அசெக்கா – எரேமியா 34:7
16. சிதேக்கியா ராஜாவின் ஆத்துமா – எரேமியா 38:20
17. கெதலியா யோகனானிடம் - எரேமியா 40:16
18. சிதேக்கியா ராஜா – எரேமியா 39:4
19. யோயாக்கீமின் பிரேதம் - எரேமியா 36:30
20. உபவாச நாள் - எரேமியா 36:6

## பிப்ரவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| |
|---|
| Mr. Bejo Nelson |
| Mr. Jean C. R. Shibin |
| Mr. Jino John |
| Mr. Sujith Gladson |

## ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள் (விடுபட்டது)

Mr. Daniel Raj

*May God Bless All*

## Birthday Celebrants – March 2022

| | |
|---|---|
| 01st March | Master. Stalin Joseph, S/o Mr. Selvamani |
| 02nd March | Mr. Broosewelt |
| 03rd March | Master. Hadyn, S/o Mr. V. N. Rajan |
| 05th March | Mr. S. Nethaji Jacob Durai |
| 05th March | Master. Aaric Ryan, S/o Mr. C. A. Vinu |
| 07th March | Mr. Jino John |
| 08th March | Mr. G. Liffin Sam, S/o Mr. Gnanadhas |
| 09th March | Mr. Jerry Jones |
| 11th March | Mr. Vinobha Alagesan |
| 14th March | Miss. Abisha Hanna, D/o Mr. Gobinath |
| 14th March | Master. J. S. Jolan Shano, S/o Mr. Jino Retna Kumar |
| 16th March | Mr. Giridharan, S/o Mr. Moorthy |
| 17th March | Miss. Aksha Judith Cynthiya, D/o Mr. A. Baskar |
| 17th March | Master. Ryan Nathaniel, S/o Mr. Berjin T.N. |
| 18th March | Mr. C. Sujin |
| 19th March | Miss. Asna, D/o Mr. J. P. Prince |
| 19th March | Miss. Abeline Jismi, D/o Mr. P. Suresh |
| 19th March | Mrs. Rubila Grace Samuel, W/o Mr. June Dennis |

| | |
|---|---|
| 22nd March | Mrs. Mary Suja, W/o Mr. Kingsly |
| 22nd March | Master. Asmith Sam Augustin, S/o Mr. Augustin |
| 24th March | Mrs. Sujatha Shalini, W/o Mr. Jino Retna Kumar |
| 24th March | Miss. Rachel, D/o Mr. Gnana Ruban |
| 24th March | Miss. Hazel, D/o Mr. Gnana Ruban |
| 28th March | Mr. Jenil Sing |
| 29th March | Mrs. Jenshy Nelselin, W/o Mr. Lenin Raj |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
    - ஓய்வுநாள் பள்ளி
    - பெண்கள் ஐக்கிய சங்கம்
    - ஆண்கள் ஐக்கிய சங்கம்
    - பாடகர் குழு
    - ஜெபக் குழு

    அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# அனுதின மன்னா – மார்ச் 2022

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மார்ச் 1 | செவ்வாய் | நீதி. 10:1-32 | நீதி. 10:6 | உபா. 29 |
| மார்ச் 2 | புதன் | யோவான் 15:1-14 | யோவான் 15:4 | உபா. 30-31 |
| மார்ச் 3 | வியாழன் | சங்கீதம் 122:1-8 | சங்கீதம் 122:7 | உபா. 32-34 |
| **மார்ச் 4** | **வெள்ளி** | **ரோமர் 12:1-21** | **ரோமர் 12:9** | **யோசுவா 1-4** |
| மார்ச் 5 | சனி | செப். 3:9-20 | செப். 3:15 | யோசுவா 5-7 |
| மார்ச் 6 | ஞாயிறு | சங்கீதம் 121:1-8 | சங்கீதம் 121:7 | யோசுவா 8-10 |
| மார்ச் 7 | திங்கள் | சங். 111:1-10 | சங். 111:10 | யோசுவா 11-14 |
| மார்ச் 8 | செவ்வாய் | எரே. 32:17-28 | எரேமியா 32:27 | யோசுவா 15-18 |
| மார்ச் 9 | புதன் | மீகா 6:1-8 | மீகா 6:8 | யோசுவா 19-21 |
| மார்ச் 10 | வியாழன் | எரேமியா 1:4-10 | எரேமியா 1:8 | யோசுவா 22-24 |
| **மார்ச் 11** | **வெள்ளி** | **எபேசியர் 5:1-13** | **எபேசியர் 5:2** | **நியா. 1-3** |
| மார்ச் 12 | சனி | பிலிப்பியர் 2:1-11 | பிலிப்பியர் 2:5 | நியா. 4-5 |
| மார்ச் 13 | ஞாயிறு | மத்தேயு 7:1-12 | மத்தேயு 7:12 | நியா. 6-8 |
| மார்ச் 14 | திங்கள் | மத்தேயு 8:1-13 | மத்தேயு 8:13 | நியா. 9-11 |
| மார்ச் 15 | செவ்வாய் | லூக்கா 11:1-10 | லூக்கா 11:9 | நியா. 12-15 |
| மார்ச் 16 | புதன் | யோவான் 10:1-18 | யோ. 10:11 | நியா. 16-18 |
| மார்ச் 17 | வியாழன் | யோபு 42:1-17 | யோபு 42:10 | நியா. 19-21 |
| **மார்ச் 18** | **வெள்ளி** | **சங்கீதம் 103:1-22** | **சங்கீதம் 103:6** | **ரூத் 1-4** |
| மார்ச் 19 | சனி | நீதி. 11:1-14 | நீதி. 11:14 | 1சாமு. 1-3 |
| மார்ச் 20 | ஞாயிறு | ஏசாயா 32:1-20 | ஏசாயா 32:16 | 1சாமு. 4-7 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மார்ச் 21 | திங்கள் | எஸ்தர் 4:1-17 | எஸ்தர் 4:17 | 1சாமு. 8-10 |
| மார்ச் 22 | செவ்வாய் | யோசுவா 5:1-15 | யோசுவா 5:15 | 1சாமு. 11-13 |
| மார்ச் 23 | புதன் | உபாகமம் 23:1-14 | உபாகமம் 23:14 | 1சாமு. 14-15 |
| மார்ச் 24 | வியாழன் | உபாகமம் 22:1-7 | உபாகமம் 22:5 | 1சாமு. 16-17 |
| **மார்ச் 25** | **வெள்ளி** | **மத்தேயு 5:1-16** | **மத்தேயு 5:16** | **1சாமு. 18-20** |
| மார்ச் 26 | சனி | எபிரெயர் 12:1-13 | எபிரெயர் 12:11 | 1சாமு. 21-24 |
| மார்ச் 27 | ஞாயிறு | எபிரெயர் 13:1-16 | எபிரெயர் 13:16 | 1சாமு. 25:27 |
| மார்ச் 28 | திங்கள் | யாக்கோபு 2:1-12 | யாக்கோபு 2:8 | 1சாமு. 28-31 |
| மார்ச் 29 | செவ்வாய் | 1தீமோ. 5:1-8 | 1தீமோ. 5:8 | 2சாமு. 1-3 |
| மார்ச் 30 | புதன் | தீத்து 2:1-15 | தீத்து 2:6 | 2சாமு. 4-7 |
| மார்ச் 31 | வியாழன் | 1கொரி. 13:1-13 | 1கொரி. 13:13 | 2சாமு. 8:11 |
| **ஏப்ரல் 1** | **வெள்ளி** | **லூக்கா 22:1-20** | **லூக்கா 22:19** | **2சாமு. 12-13** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ மார்ச் 2022

| | | |
|---|---|---|
| 04-03-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sheeba Sujith |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Ananth Raj G. |
| 11-03-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sujatha Shalini Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Andrew |
| 18-03-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sumimol Vinobha |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Anu |
| 25-03-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Synthia Srinivas |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Arun Paul |
| 01-04-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Thamari Johnson |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Augustin Dhayanantha Raj |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. S. Bovas**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : pastor@csitamilchurchoman.org**

**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**